உ
மரக்காணம் பூமீச்சுரர் அருள்
மண்டகப்பாளையம் அங்காளம்மன் துணை.



மரக்காணம் பூமீச்சுரர்
மண்டகப்பாளையம்
அங்காளம்மன்
வரலாறு

★

மரக்காணம் மலையகுல கோத்திரத்தார்
மண்டகப்பாளையம்.

★

12-2-1968.

உ
மரக்காணம் பூமீச்சுரர் அருள்.
மண்டகப்பாளையம் அங்காளம்மன் துணை


மரக்காணம் பூமீச்சுரர்
மண்டகப்பாளையம் அங்காளம்மன்
வரலாறு

இக்குறிப்பு ஆசிரியர்,
ம. தி. தொ. தி. அ. ஆ.
தியாகராஜ முதலியார்,
அம்மாபேட்டை, சேலம் - 3.

விருத்தம் அமைத்தது
ம. தி. கு. வெ. தி. வெ. ரா. முருகேசன்,
மண்டகப்பாளையம், திருச்செங்கோடு.

வெளியிடுவோர்:
மரக்காணம்
மலையகுலகோத்திரத்தார்கள் குழு.
ம. தி. தொ. மு. சி. முத்துசாமி முதலியார்,
மண்டகப்பாளையம், திருச்செங்கோடு.
மரக்காணம், விசாகம், ஆறுமுக முதலியார்,
மண்டகப்பாளையம், திருச்செங்கோடு.

12 - 2 - 1968.



உ

மரக்காணம் பூமீச்சுரர் அருள்.

மரக்காணம் திருப்பூமிக் குள்ளிருந்து தீவிரமாய்
மரக்காலில் திரமாய்த் தோன்றி
திருப்பூமிக் கருள் செய்த சிவபெருமா
னீன்றெடுத்த செல்வன் ஒற்றை
மருப்புடைய வித்தகனை மனதிலே
சிந்தித்து வணங்கி மாயன்
மருள் கெடுத்தங் காளம்மன் மாண்புடையத்
திருவடி யை வணங்கி வாழ்வோம்.



மண்டகப்பாளையம் அங்காளம்மன் அருள்

குடியால வந்திடும் தாயே!

விருத்தம்

மண்டகப் பாளையந்தனில் வீட்டிருக்கும் தாயேநீ
மாதர்குலப் பெண்டிர்க்குத் திலகமுமாமே
எங்களின் குலத்தலைவி என்றுமே யாங்கள்
உங்களின் அடியரராய் தலைமுறையாவோம்

மரக்காண தலத்தின் மாமணி நீயிங்கு
மறக்காது எங்களின் குலவாழ்த்துவாயே
மானந்தனை காத்தும் மங்கையரை யேத்தும்
மனையெங்கும் மகிழ்வைத் தருவாயே

சிவனுக்கு இடபாகம் இருக்கின்ற தாயும்மை
சிலையெடுத்து நாங்களும் தொழுகின்றோமே
தவத்திரு முனிவனும்மைபிரிங்கிரிசி தொழுதிடா
தனியான உமையவளைத் தொழுகின்றோமே

தனித்தறி நெசவில் பட்டாடை நெய்து
தாயும்மைத் தொழுதிட திருநாளெடுத்தோம்
பல்லாண் டிற்கொருமுறை வழிபடும் எங்களை
எவ்வாண்டும் நினைவுற வாழ்த்தம்மா

திருக்கொடி மாடச்செங் குன்றைச் சார்ந்த
திருமலையடி மண்டகப் பாளையத்தே
மாங்கனி தேங்கனி மலரெலா மெடுத்தும்மை
மலையப்ப குலத்தவர் நாடிவந்தோம்

அன்றுபோ லின்றும் இன்றுபோ லென்றும்
அங்கையர் கன்னித்தா யும்மைத்தொழ
அடியார்கள் எங்கள் குலப்பெருமை ஓங்க
குடியால வந்திடும் தாயே!

உ

மரக்காணம் பூமீச்சுரர் அருள்.

மண்டகப்பாளையம் அங்காளம்மன் துணை.

மரக்காணம் திருப்பூமி குடும்ப வரலாறு.

திருப்பூமிக் குடும்பத்தினர் முற்காலத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள மதுராந்தகத்தில் வசித்துவந்தவர்கள். அவர்களில் திருப்பூமி என்பவர் முதல் மகனாவார். அவர் திருமணப் பருவம் அடைந்தபோது அக்குடும்பத்தினர் திருப்பூமிக்குப் பெண் பார்க்கத் திண்டிவனத்திற்கு 22 மைல் தொலைவில் உள்ள கரியம்பாளையம் சென்றிருந்தனர். பெண்ணும் கரியம் பாளையத்தில் படிந்தது திருமணமும் நடந்தது. உடனே திருப்பூமி கரியாம்பாளையம் மாமனார் வீட்டு அழைப்புக்கிணங்கிச் சென்று விட்டார். சென்றவர் திருப்பூமியார் நாள்தோறும் வினாயகரை வழிபட்டுவரும் பண்பினர் அங்கு வினாயகர் கோவிலே இல்லை. ஆதலால் மூன்று நாட்களாய் உணவும் உண்ணவில்லை.

இதைக்கண்ட மைத்துனமார்கள் இவருக்கு ஒரு கோவில் அமைத்துத் தர திட்டமிட்டு வெளியே சென்றனர்

அப்படிச் சென்றவர்கள் ஒரு காட்டை அடைந்து இடம் தேடினர். இடமும கிடைத்தது பின அக்காட்டிற்குப் பக்கத்தே உளள குடியானவனொருவனிடம் மரக்கா வன்னம பெற்றனர். பெற்றதும் அவர்கள் பார்த்த அவ்விடத்திற்கே வந்து அவ்விடத்தைத் தூய்மை செய்து அம் மரக்கால் வன்னத்தைத் தலைகீழாக நட்டனர். நட்டதும் அதற்குத் திருநீரணிந்து சந்தனப்பொட்டிட்டு அதன்மீது ஒரு குங்குமப்பொட்டும இட்டு, அருகு, எருக்கு முதலியன தொடுத்து. மாலை கட்டி அதற்கு அனிவித்தனர் பிறகு திருப்பூமியினாரை அழைகக வந்தனர். வந்தவர்கள் தாங்கள் கோவில் கண்டதாய்க் கூறி திருப்பூமியாரை அழைத்தனர். அக் கோவிலுக்கு திருப்பூமியினார் சென்றார் அப்பொழுது அவருக்கு அவ்வன்னம் வினாயகராகவே காட்சி கொடுத்தது.

அப்படிக் காட்சி தர ,திருப்பூமியினார் நீராடி விட்டு வெண்பட்டாடை உடுத்தி, திருநீரணிந்து வினாயகரை வழிபட வந்தார்; வழிபட்டார். அங்குள்ள பிறரையும் வழிபடப் பணிந்தார். பலர் வழிப்பட்டனர்.

பின்பு திருப்பூமியினார் வீடுதிரும்பினார். வீட்டிற்கு வந்ததும் நன்முறையில் உணவு கொண்டார். பிறகு அவருக்குத் தாம்பூலம் கொடுக்கப்பட்டது. தாம்பூலம்

போடச் செல்லுகையில் மைத்துனமார்கள் அவரைக் கண்டு சிறிது நகைத்தார்கள். அதற்கு அவர் ஏன் என்னைக் கண்டதும நகைக்கிறீர்கள் என்று கேட்டார்? அதற்கு அவர்கள் கீழ்கண்டவாறு விடையிறுத்தார்கள்.

நாங்கள் வினாயகர் கோவிலையே காணவில்லை. ஏதோ காட்டிற்குச் சென்றோம். அங்கு வெற்றிடமொன்றைத் தேடினோம். இடம் கிடைத்ததும அங்கிருந்த குடியானவன் ஒருவனிடம் மரக்கால்வன்னம் பெற்றுத் தலைகீழாகப்பதித்தோம் அழகு செய்தோம். நீங்கள் அதை உண்மையென நம்பி மரக்காலை வழிபட்டீர்கள், உணவும் உண்டீர்கள் என்று சொல்லி நகைத்து. நாங்கள் சொல்வது உண்மை என்பதற்கு இதுகாலை அவ் வனத்துக்கு உரிய குடியானவன் வருவான் என்று சொல்ல அப்போதே குடியானவனும் வந்து அம்மரவன்னத்தைக் கேட்டான். அப்படி அக்குடியானவன்வந்து கேட்க்க அனைவரும் அம்மரக்கால் வன்னம் இருக்கும இடத்திற்குத் திருப்பூமியாரை அழைத்துச் சென்றனர் அவர்கள் கண்ணிற்கு அது வன்னமாகவே காட்சி தந்தது உடனே அதைச் சென்று பிடுங்கினார்கள் பிடுங்கமுடியவில்லை பின் நிலத்தைப் பறித்தார்கள் அங்கும் அது வளர்ந்து கீழே ஆழமாய்ச் சென்றது பின் கோடாரியால் அதன் உச்சியைச் சாய்வாக அடித்து பேர்த்தெடுக்க முயன்றனர் அப்போது வன்னத்தின் உச்சியில் அடிபட்டதால் சிறிது காயம்பட்டு இரத்தம் வடிந்தது. அதைக்கண்ட

திருப்பூமியார் தன் கையால் பொத்திப் பிடிக்க இரத்தம் நின்றுவிட்டது அதனால் பக்கத்தில் இருந்த அனைவரும் தன் மைத்துனப்பெருமானரது அருட்டன்மையை உணர்ந்தனர்.

அப்படி மக்கள் உணர்ந்த நாள்தொடங்கி திருப்பூமியாரை உணர்த்தியபின் தொடங்கி அவ்வூருக் குறிய 'கரியம்பாளையம்' என்ற பெயரை மாற்றி மரக்காணம் என்ற பெயரை அவரே சூட்டினார்.

மரக்காணம், திருப்பூமிக்குள்ளிருந்து தீவிரமாய் மரக்காலில் தீரமாய்த் தோன்றி திருப்பூமிக்கருள்செய்த சிவபெருமானே, அம் மாவன்னமானது பூமியிலேபதிந்து வேரூன்றியமையால் அவ்வூராருக்கு அத் தெய்வம் பூமிச்சுரர் என்றும் பெயர் சூட்டித்தான் வழிபட்டார். பிறரும் வழிபட்டனர் பின்பு அவரே தன் குலப்பெருமை நாளும் விளங்கிவர ஒரு சத்தியம் செய்துவழிபட்டார். அதாவது பூமியில் தோன்றிய நாதனாகிய உன் பெருமையை என் குலத்திற்கு விலங்கச்செய்யுமுகத் தான் எங்கள் குடும்பங்களில் ஒருவருக்குப் பூமிலிங்கம், மற்றொருவருக்குத் திருப்பூமி என்றும், மற்றொருவருக்கு மலையப்பன் என்றும், இன்னொருவருக்கு கடலே என்றும், பிறரொருவருக்கு நல்லபூமியான் என்று பெயர் சூட்டு

வதாய் வாக்குறுதிதந்து சென்றனர் அப்படியே இன்றும் எங்களது குடும்பங்களில் பரம்பரையாக பெயாமுறை வழங்கி வருகின்றது இதுவே எங்கள் திருக்குலத்தின் தோற்றமுறையாகும.

சில ஆண்டுகளுக்குப் பின் அரசுபுரியும் ராஜாக்கள் மூலம் பூமிஈச்சுவரர் ஆலயம் அமைக்கப்பட்டது மகாமண்டபமும், கெர்ப்பக மண்டபமும, திருமதிலும் உபயமாக கோவிலில் அமைக்கப்பட்டது. அது சமயம் கிரிஷ அம்மாள், பஞ்சமூர்த்திகளை ராஜாக்கள் ஸ்தாபனம் செய்தார்கள்.

மண்டகப்பாளையம்

ஸ்ரீ அங்களம்மன்பரமேஸ்வரி வரலாறு.

மயானத்தில் அங்காளம்மன் அமைக்கப்படும். முற்காலத்தில் மலையனூரில் உள்ள அங்காளம்மனை எங்கள் குலத்தார் குலதெய்வமாகக் கருதி வழிபட்டு வந்தார்கள். சில ஆண்டுகட்குப் பிறகு அப்பாஜி அரசு காலத்தில் (சுமார் 1066ம் ஆண்டு கலியுகம் 4168 சாலிவாகனம் 989 ஆண்டு) சுமார் 200 மைல் தொலைவில் உள்ள சேரநாட்டில் உள்ள கோயம்புத்தூரைச் சேர்ந்த மாமன மைத்துனர்கள் 5 பேர் (1. திருப்பூமி, 2. மாயன், 3. சடயப்பர், 4. கருத்தார், 5. வைத்தி)

குடும்பத்தினர்கள் மருதாந்தரத்தை விட்டுவந்து இங்கு வில்லரசம்பட்டியில் குடியேறினார்கள். அங்கு ஒரு விநயகமூர்த்தியை ஸ்தாபித்தார்கள். பின் மண்டகப் பாளையம் வந்து முன்புள்ள குலதெய்வமான அங்காள அம்மனையே வழியேற்றி வருகிறார்கள். கூட மருவார் குழலி. பூவர்குழலியர்களை முறையே நாங்கள் குல தெய்வமாயும் வழிபட்டு வருகிறோம்.

மரக்காணம் வழி மண்டகப்பாளையத்தில் இருந்து 186 மைல் தூரத்திலும், திண்டிவனத்துக்குக் கிழக்கே 22 மைல் தொலைவிலும் உள்ளது.

சுபம். சுபம். சுபம்.

முக்கியமான வேண்டுகோள்

நம் பெரியோர்காலத்தில் மார்கழி மாதம் திருவாதிரை விரதம் மூன்று ஆண்டுகள் இருந்தார்களாம் அதில் தடைப்பட்டது விபரம்

முதல் ஆண்டு சமையல் செய்த பாத்திரத்தில் பூனை விழுந்து இறந்தது. இரண்டாம் ஆண்டு தொட்டிலில் தூங்கும் குழந்தை இறந்துவிட்டது. மூன்றும் ஆண்டு அடுப்புக்கு மண் வெட்டியது அது குட்டிச் சுவற்றிற்குக் கீழே வெட்டியது அப்பொழுது சுவர் சரிந்து பெரியம்மாள்மேல் விழ அவர் இறந்து விட்டார்.

ஆகையால் நம் பெரியோர்கள் திருவாதிரை விரதம் இருக்காமல் விட்டார்கள் அதுபடியே விரதமும் இருப்பது இல்லை. சிலர் பல ஊர்களில் பழக்க வழக்கத்தில் விரதம் இருக்கிறார்கள் அதை இனிமேல் திருவாதிரை விரதம் இருக்காமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம் பிறர் திருவாதிரைக்குச் செய்த பட்சணமும், விபூதியும் வாங்கக்கூடாதென்று பெரியோர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே இனி இப்படி செய்யாமல் இருக்கும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,

மரக்காணம் மலையகுல

கோத்திரத்தார் குழு,

மண்டகப்பாளையம்.

குறிப்பு :- இந்த மடக்காணம் மலையகுல கோத்திரத்தார்கள் அனைவரும் இந்த வரலாற்றை ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாப்புடன் வைத்திருப்பது அவசியம்.

ஆனந்தா பிரஸ், திருச்செங்கோடு.